**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**STC No.1050/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Ravichandran | Prosecution | PW1 chief |
| Father Name | Kaliyaperumal | Defence | |
| Village | 54, Kadukkamaram, Gopalasamuthram Post. | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 57/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**14.02.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். எதிரி கார்த்திகா க/பெ. சிதம்பநாதன் என்பவருக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் சத்யபிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 13.05.2024 | எதிரி எனக்கு வழங்கிய காசோலை, SBI வங்கி, சீர்காழி கிளை ரூ. 21,00,000/- காசோலை எண். 175212 -ன் அசலை தாக்கல் செய்கிறேன். | **பு.சா.ஆ.1** |
| 2 | 14.05.2024 | புகார்தாரர் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி சீர்காழி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்த காசோலை Exceeds Arrangement என்ற குறிப்பாணையுடன் திருப்பப்பட்டதற்கான மெமோவின் அசலை தாக்கல் செய்கிறேன். | **பு.சா.ஆ.2** |

| | | | |
|---|---|---|---|
| 3 | 11.06.2024 | எனது வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் | **பு.சா.ஆ.3** |
| 4 | 14.06.2024 | எனது வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்வு செய்யப்பட்டதற்கான கணினி இணையதள பதிவிறக்க நகல் | **பு.சா.ஆ.4** |
| 5 | 04.02.2022 | கடனுறுதி சீட்டு அசல் | **பு.சா.ஆ.5** |
| 6 | | புகார்தாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | **பு.சா.ஆ.6** |

எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எனது சாட்சியத்தையும் சான்றாவனத்தையும் ஏற்று எனக்கு உரிய இழப்பீடு தொகை வழங்கியும் எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**